**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(24.08.2022 முதல் 28.08.2022 )**

**அறிக்கை எண் 067/2022** **தேதி.23.082022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (19.08.2022 முதல் 22.08.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 28.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19/08 | 20/08 | 21/08 | 22/08 | தேதி | நாள்-1 20/08 | நாள்-2 21/08 | நாள்-3 22/08 | நாள்-4 23/08 | நாள்-5 24/08 |
| 0.0 | 0.2 | 0.0 | 6.8 | மழை (மி.மீ) | 6 | 10 | 22 | 4 | 10 |
| 33 | 32 | 32 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 30 | 30 | 31 | 31 |
| 24 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 21 | 21 | 21 |
| 7 | 7 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 85 | 83 | 82 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 80 | 80 | 80 |
| 67 | 67 | 66 | 85 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 40 |
| 17 | 19 | 19 | 23 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 6 | 6 | 6 |
| 230 | 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 270 | 80 | 280 | 290 | 290 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (24.082022 முதல் 28.08.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மெடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| 24-08-2022 | 31 | 39 | 28 | 76 | 61 | 23 | 61 | 31 | 28 | 89 | 45 | 71 | 35 | 35 |
| 25-08-2022 | 34 | 39 | 32 | 78 | 45 | 30 | 50 | 31 | 32 | 62 | 39 | 65 | 46 | 46 |
| 26-08-2022 | 28 | 30 | 27 | 51 | 30 | 26 | 34 | 24 | 26 | 38 | 29 | 43 | 41 | 41 |
| 27-08-2022 | 15 | 18 | 14 | 34 | 22 | 13 | 23 | 15 | 14 | 29 | 18 | 29 | 19 | 19 |
| 28-08-2022 | 18 | 20 | 18 | 30 | 23 | 18 | 23 | 16 | 18 | 28 | 21 | 27 | 21 | 21 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு மிதமான மழையுடன் காற்றின் வேகம் **6 – 8** கி.மீ வரை எதிர் பார்க்கப்படுபிறது. பயிர்களுக்கு நீர்பாசனம் செய்வதனை ஒத்திவைக்க வேண்டும். உயரமான பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் கனமழை எதிர் பார்க்கப்படுவதால் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்தப்பகுதியில் வசிப்பவர்கள் தங்கள் கால்நடைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுமாறு அறிவுருத்தப்படுகிறார்கள். |
| நெல் | வளர் மற்றும் பூக்கும் பருவம் | மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல் பயிருக்கு வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| சோளம் | விதைப்பு | பெறக்கூடிய மழையைப் பயன்படுத்தி மானாவாரியில் தீவனச்சோளம் விதைப்பு மேற்கொள்ளலாம். |
| மக்காச்சோளம் | விதைப்பு | பெறப்பட்ட மற்றும் எதிர் பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மக்காச்சோளம் இறவை மற்றும் மானாவாரி பயிராக பயிர் செய்யலாம். மானாவாரி பயிராக பயிர் செய்யும் பொழுது ஒன்று அல்லது இரண்டு உயிர் தண்ணீர் கொடுப்பதற்கு தயாராக இருக்கவேண்டும். |
| தட்டைப்பயிர் | விதைப்பு | பெறக்கூடிய மழையைப் பயன் படுத்தி மானாவாரியில் தட்டப்பயிர் விதைப்பு மேற்கொள்ளலாம். |
| கரும்பு | வளர்பருவம் | வரும் ஐந்து நாட்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பின்பட்ட கரும்பிற்கு இரண்டாவது தவணையாக ஒரு ஏக்கருக்கு |

| | | |
|---|---|---|
| | | அணைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தக்காளி | நடவு | மழை எதிர்பார்க்கப்படுவதால் பார் மற்றும் சாலில் தக்காளி நாற்றுகளை நடவு செய்யவதன் மூலம் தண்ணீர் தேக்கத்தை தடுத்து தக்காளி பயிர் அழுகலை குறைக்கலாம். |
| மஞ்சள் | விதைப்பு மற்றும் வளர் பருவம் | மழை எதிர்பார்க்கப்டுவதால் மஞ்சளில் தக்க வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.மேலும் காற்றின் அதிக ரப்பதம் மற்றும் மேக மூட்டத்தின் காரணமாக மஞ்சளில் இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. அதனைக் கண்காணித்து தேவைப்பட்டால் மேங்கோசெப் என்ற பூஞ்சான கொல்லியை 1 லி தண்ணீருக்கு 2.5 கி என்றளவில் கலந்து தெளிப்பதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கலாம். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி மீ விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேல் வயதுடைய வாழை மற்றும் கரும்புக்கு ஊன்று கொடுக்க வேண்டும். மேலும் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். |
| கால்நடைகள் | | தற்போதைய வானிலை காரணமாக கறவை மாடுகளில் நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவ வேண்டும்.<br>மாடுகளை குளக்கரைகளில் புதிதாக முளைத்த தாவரங்களை மேய்சலுக்கு விட வேண்டாம். இதனால் வரக்கூடிய துள்ளுமாறி நோயைத் தவிர்க்கலாம்.<br>காற்றின் வேகம் மற்றும் மேகமூட்டம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க தேவையான அளவு குடிநீர் கொடுக்கவும் |

**குறுஞ்செய்தி**

- மழையை பயன்படுத்தி மக்காச்சோளத்தினை இறவை மற்றும் மானாவாரி பயிராக பயிர் செய்யலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**